# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## செய்திக்குறிப்பு

ஒருங்கிணைந்த குடிமைபணிகள் தேர்வு-$_{II}$ (தொகுதி-$_{IIA}$) (நேர்முகத்தேர்வு அல்லாத பதவிகள்) ல் அடங்கிய பணிகளுக்கான சான்றிதழ் சரிபார்ப்பிற்கான மூலச்சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யும் வசதி 23.04.2018 அன்றிலிருந்து துவங்குகிறது. சான்றிதழ் சரிபார்ப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள், 04.05.2018 ற்கு முன்னர் தங்களது மூலச் சான்றிதழ்களைத் தேர்வாணைய இணைய தளத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் நடத்தும் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். இதற்கான சேவையை மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்டங்களில் துவக்கிவைக்க உள்ளனர்.

மேற்படி தேர்வில் பங்கேற்ற அனைத்து விண்ணப்பதாரர்களுக்குமான தரவரிசை பட்டியலும் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரகளில் பதிவெண் பட்டியலும் தேர்வாணையத்தின் இணையதளத்தில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது சான்றிதழ் சரிபார்ப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரகள் என்னென்ன சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்ற குறிபாணையும், எந்தெந்த அரசு இ-சேவை மைங்களில் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யலாம் என்ற அரசு இ-சேவை மைங்களின் முகவரியுடன் கூடிய பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. அரசு இ-சேவை மையங்கள் அரசு விடுமுறை நாட்களில் இயங்காது என்பதாலும் வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 வரை மட்டுமே இயங்கும் என்பதாலும் விண்ணப்பதாரர்கள் கடைசி நாள்வரை காத்திருக்காமல் உடனடியாக தங்களது சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இரா. சுதன்., இ.ஆ.ப.,

தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர் & செயலாளர் (பொறுப்பு)